2023 ஏப்ரல் 10]

இருக்கிற மாணவர்கள் பயன் பெறுவார்கள். அங்கே காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்ற நான் முன்பே சொன்னதைப்போல syllabus-லேயே அந்தப் பாடத் திட்டங்களைச் சேர்த்து தொழிற்சாலைகளின் முன்னேற்பாடுகளோடு அந்தத் தொழிற்சாலைகளும் இவர்களோடு சேர்ந்து பயிற்சி அளிக்கிற வகையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், பாலிடெக்னிக் உடன் தொழிற்சாலைகளும் சேர்ந்து பயிற்சி அளிக்க வேண்டும் என்றுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். இருவரும் சேர்ந்து செய்கிறபொழுதுதான், மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் என்ற உணர்வோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். நிச்சயமாக, அதுவும் உங்கள் மாவட்டம் கல்வியில் அதிகமானோர் சிறந்திருக்கிற மாவட்டம். விரைவில் அது நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் கேட்டது, கலைக் கல்லூரியில் PG.-முதுகலை பட்டப் படிப்பு ஆரம்பிக்க முடியுமா? முதல் அரசு கலைக் கல்லூரியை போன வருடம் நீங்கள்தான் கொடுத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: எப்போதுமே கன்னியாகுமரி என்றால், நீங்கள் கேட்கிறீர்களோ, இல்லையோ, சபாநாயகர் correct-ஆக கேட்டுவிடுவார், விடமாட்டார். அவர் PG Course வேண்டுமென்று கேட்கிறார். இந்தக் காலத்திற்கேற்ப, அங்கே இருக்கிற தேவைகளுக்கேற்ப PG course, Ph.D. கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

124—

வேளாண்மைக் கல்லூரி

***18393— திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2023 ஏப்ரல் 10

(அ) திருமங்கலத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

முற்பகல் 10–25

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா மாவட்டத்தை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, இன்றைக்கும் உழவர்களினுடைய உரிமையைப் பாதுகாத்து நிற்கின்ற காவேரி காப்பாளர், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) வேளாண் உற்பத்திக்காக 5 முறை மத்திய அரசினுடைய* Krishi Karman *விருதை இந்த தாய்த் தமிழ்நாட்டுக்கு பெற்றுத் தந்த ஒரே முன்னாள் முதலமைச்சர், கழகத்தின் பொதுச் செயலாளர் பாசமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். இன்றைக்கு உழவர் பெருமக்கள் பல்வேறு சவால்களைச் சந்தித்து வருகிறார்கள். நிதிநிலை அறிக்கையிலேகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். குறிப்பாக, இந்தப் பருவநிலை மாற்றத்திலே வெள்ளம், வறட்சி ஆகியவற்றை எதிர்கொள்வதற்கான புதிய இரகங்களைக் கண்டுபிடிப்பதும், உருவாக்குவதும் மிக அவசியமாகிறது. இன்னொன்று; மிகப் பெரிய சவால் என்னவென்று சொன்னால், அது குறைந்து வரக்கூடிய பரப்பளவு; உற்பத்தி செய்கிற பரப்பளவு, மகசூல் பரப்பளவு குறைந்துகொண்டே வருகிறது. அப்படியானால் நவீன தொழில்நுட்பத்தை இன்றைக்கு விவசாயத்திலே நாம் கொண்டு வர வேண்டிய காலத்தின் கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. ஒருபுறத்திலே தொழிற்சாலைகள் அதிகரித்து வருகிற சவாலை எதிர்கொண்டு, உணவு உற்பத்தியை நிலைநிறுத்துவதற்கு வேளாண்மைக் கல்வியை விரிவுபடுத்த வேண்டிய அவசியம்*

2023 ஏப்ரல் 10]

இருக்கிறது. எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஒரு காலத்திலே கலைக் கல்லூரியிலே அதிகமாக விருப்பம் தெரிவித்து சேர்ந்தார்கள். பிற்காலத்திலே Engineering College*-லே சேர்ந்தார்கள். இன்றைக்கு மருத்துவத்திலே சேருவதற்கு பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, எளிய குடும்பத்தைச் சேர்ந்த சாமானிய மாணவர்களெல்லாம் விவசாயக் கல்லூரிகளிலே தொழில்நுட்பக் கல்லூரிகளிலே படித்து, 90 இலட்சம் பேர்கள் இன்றைக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவுசெய்து வேலைவாய்ப்புக்காக காத்திருக்கிறார்கள். ஆகையால், இந்த வேளாண்மைக் கல்வியை விரிவுபடுத்துவதன் அவசியம் என்பது, இப்போது காலத்தின் கட்டாயமாக இருக்கிறது. திருமங்கலம் தொகுதியிலே விவசாயம் செய்வதற்கு ஏற்ற இடங்கள் இருக்கின்றன. ஆகவே, ஒரு வேளாண் கல்லூரியை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதிக்கு அருகில் மதுரை, பெரியகுளம் போன்ற இடங்களில் 4 அரசு வேளாண்மைக் கல்லூரிகள் இருக்கின்றன. அங்கு 5 வேளாண் ஆராய்ச்சி நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. 2 வேளாண் அறிவியல் நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. 5 இணைப்புக் கல்லூரிகளாக தனியார் கல்லூரிகளும் அந்தப் பகுதியிலே இயங்கி வருகின்றன. இந்தக் கல்லூரிகளில் மொத்தம் உள்ள 1,145 இடங்களில், 840 இடங்கள் மட்டுமே நிரம்பியுள்ளன. மீதமுள்ள 305 இடங்கள் நிரப்பப்படாமல் இப்போது காலியாக இருக்கின்றன. மாணவர்கள் சேர்வதற்கு ஆர்வமாக வருவதில்லை. இப்போது அரசாங்கம் அங்கே புதிய கல்லூரி துவக்க வேண்டுமென்றால், 110 ஏக்கர் நிலம் வேண்டும். திருமங்கலம் பகுதியில் 110 ஏக்கர் நிலம் வாங்க வேண்டும். ஆக, இத்தகைய இடர்பாடுகள் இருக்கிற காரணத்தால் இதுபோன்ற புதிய ஆராய்ச்சி நிலையங்கள் துவக்குவதற்கு இப்போது சூழ்நிலையும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், புதிய ஆராய்ச்சி நிலையங்கள் வேண்டும், மகசூல் பரப்பளவு சுருங்கி வருகிறதென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றார்கள்.*

இங்கே கல்லூரிகளில், அதிக அளவில் கிட்டத்தட்ட 700–க்கும் மேற்பட்ட காலியிடங்கள் இருக்கின்றன. ஆராய்ச்சி முக்கியமாகத் தேவை. ஏனென்றால், இப்போது புதிய இரகங்கள் கண்டுபிடிப்பதற்கு ஆராய்ச்சிகள் தேவை. ஆனால், புதிய கண்டுபிடிப்புகள் இந்த இடைப்பட்ட காலங்களில் குறைந்து ஆராய்ச்சிப் பணிகள் குறைவாக இருக்கின்றன. ஆனால், இப்போது வேளாண் கல்வி முடுக்கிவிடப்பட்டு காலியிடங்களை நிரப்பக்கூடிய ஒரு சவாலான நேரத்தில் நாங்கள் இருக்கின்றோம். ஆக, இதையெல்லாம் அறிந்துதான் இங்கே விவசாயத்தினுடைய பரப்பு சுருங்கவில்லை, விரிந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருவாய்த் துறை அமைச்சராக 10 ஆண்டுக் காலம் தொடர்ச்சியாக மதுரையிலே பணியாற்றிக் கொண்டிருந்தார். இப்போது எல்லைகள் சுருங்கவில்லை. இப்போது விவசாய வேளாண் பரப்பளவு அதிகரித்து, நெல் விளைபொருட்களின் உற்பத்தி அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே மல்லிகை உற்பத்தி செய்யப்படுவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். மல்லிகைக்கு, சங்க காலம் தொட்டு மிகப் பெரிய பாரம்பரியமான தொடர்புண்டு. அதிகமாக மல்லிகை பயிரிடப்படுவதும், மகசூல் பெறுவதும் உங்களுக்குப் பக்கத்திலே இருக்கிற இரண்டு அமைச்சர்களுக்கும் தெரியும். அந்தப் பகுதியாகத்தான் அவர்கள் போக வேண்டும். திருமங்கலம் தொகுதியில்தான் மல்லிகையை அதிகமாகப் பயிரிடக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியபோது, 10 ஆண்டுகள் அமைச்சராக இருந்தவர் என்று சொன்னார்கள். 10 ஆண்டுகளிலே திருமங்கலம் தொகுதியிலே ஓர் அரசு கலைக் கல்லூரியைக் கொண்டு வந்தார்கள். AIIMS மருத்துவமனையைத் தமிழ்நாட்டிலே திருமங்கலம், திருப்பரங்குன்றம் தொகுதிக்குக் கொடுத்தவர், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, வருவாய்க் கோட்டம். திருமங்கலம் புதிய வருவாய்க் கோட்டத்தைக் கொடுத்தார்கள்; புதிய பேருந்து நிலையத்தைக் கொடுத்தார்கள்.

2023 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்விக்கு வாருங்கள். நீங்கள் நிறைய விஷயங்களைச் செய்திருக்கிறீர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *அவர் சொன்னதற்காகச் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது கேள்வி நேரம். கேள்விக்கு வாருங்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *முன்னாள் அமைச்சர்கள் கேள்வி கேட்டால், எல்லா அமைச்சர்களுமே இந்த 10 ஆண்டுகள் என்ன செய்தீர்கள் என்று கேட்கிற காரணத்தினால், எங்கள் தொகுதிக்கு என்ன செய்திருக்கிறோம் என்று சொல்கிற உரிமை எங்களுக்கு, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்விக்கு வாருங்கள்.* Debate *வேண்டாம்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *என்ன செய்திருக்கிறோம் என்று சொல்கிற உரிமை எங்களுக்கு இருக்கிறது. . .*

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வேண்டாம், நீங்கள் கேள்விக்கு வாருங்கள். மறுபரிசீலனை செய்வீர்களா? அதுதானே.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *ஒரு நிமிடத்தில் சொல்லி முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விவசாயக் கல்லூரி அந்தப் பக்கத்தில் கண்டிப்பாக தேவை.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *ஒரே ஒரு நிமிடத்தில் சொல்லி முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுமட்டும் போதும். மற்றவை வேண்டாம்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *திருமங்கலம் தொகுதியிலே அரசு கலைக் கல்லூரியிலே தொடங்கி பல்வேறு நலத் திட்டங்களை வருவாய் கோட்டம், வருவாய் வட்டம், புதிய கட்டடங்கள்,* AIIMS *மருத்துவமனை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள், முன்னாள் அமைச்சராக இருந்தவர். நீங்கள் தயவுசெய்து கேள்விக்கு வாருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் சொன்னது போதும். நிறைய சொல்லியாகிவிட்டது. நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: இன்றைக்கு வேளாண்மைக் கல்லூரியில் போதிய இடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குக் காரணம் counselling நடத்துவதிலே நிர்வாகத்தினுடைய தாமதம்தான். அவர்கள் நிர்வாகத் தாமதத்தினால் பல்வேறு professional courses-ல் சேர்ந்துவிட்ட காரணத்தினால், ஏற்பட்ட காலி இடங்கள்தான். ஏனென்றால் இங்கு இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகமாக முதலில் கலைக் கல்லூரிக்குத்தான் பரிந்துரை கடிதம் கொடுப்போம். ஆனால், இப்போது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், கேள்விக்கு வாருங்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: வேளாண்மைக் கல்லூரிக்குத்தான் அதிகமான பரிந்துரை கடிதங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால், தனியார் கல்லூரிக்கு போக வேண்டிய ஒரு சூழ்நிலை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, வேளாண்மைக் கல்லூரி தேவை இருக்கிறது என்று சொல்கிறீர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: தனியார் கல்லூரிகளிலே எளிய குடும்பத்தைச் சார்ந்த மாணவர்கள் சேர முடியாத ஒரு சூழ்நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பற்றி தெரியும். மாண்புமிகு உறுப்பினர், அரசு விவசாயக் கல்லூரி வேண்டுமென்று கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேளாண்மைக் கல்லூரி அமைத்துத் தர முன்வருவார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், அரசு விவசாயக் கல்லூரி வேண்டுமென்று கேட்கிறார்கள். அதை மறுபரிசீலனை செய்வீர்களா என்று கேட்கிறார்கள்.

2023 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தொகுதியில் எல்லாக் கல்லூரிகளையும் கொண்டு வந்திருக்கிறோம். இதையும் அமைத்துக் கொடுங்கள் என்று கேட்கிறார். ஆகவே, அவருடைய காலத்திலே செய்ய முடியாததை இப்பொழுது கேட்கிறார். இப்பொழுது நிதி நெருக்கடியான சூழ்நிலைகள் இருக்கின்றன. ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால், 110 ஏக்கர் நிலம் வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 45 பணியிடங்கள்—ஒரு புதிய கல்லூரி துவக்க வேண்டுமென்றால், அதற்குத் தேவையான 45 ஆசிரியர் பணியிடங்களில் நியமனம் செய்யப்பட வேண்டும். கடந்த காலங்களில் பணி நியமனங்கள் செய்யப்படாமல், கிட்டத்தட்ட 700-க்கும் மேற்பட்ட காலியிடங்கள் இருக்கின்றன. ஆகவே, நல்ல தரமான கல்வியைக் கொடுக்க வேண்டுமென்றால், முதலில் காலி இடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. அதனால் அத்தகைய சூழ்நிலையில் புதிய கல்லூரியைத் தொடங்குவதற்கு ஏதுவாக அரசின் சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

125—

தொழிற்பூங்கா

***78459—டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, சங்கரன்கோவில் வட்டம், கரிவலம்வந்தநல்லூர் பகுதியில் தொழிற்பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

TRUTH ALONE TRIUMPHS